நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 334 /2024

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜபிரபாகரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | அங்கயைன் |
| கிராமம் | : | மூலக்காடு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 38 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 25–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.27PM

1. நான் தற்போது மூலக்காட்டில் குடியிருக்கிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். இந்த விபத்தில் இறந்தவர் எனது நண்பர் கார்த்திக் ஆவார். சுமார் 1 வருடங்களுக்கு முன்பு இரவு 9.00 மணி அளவில் நான் கொளத்தூர் சென்றுவிட்டு விபத்து நடந்த இடத்தில் என்னுடைய இரு சக்கர வாகனத்தில்

பாலிக்காடு டீக்கடை பஸ்ஸ்டாப் அருகில் வந்து கொண்டிருந்தேன்.

2. இறந்துபோன கார்த்திக் அவருடைய யமாகா இருசக்கர வாகனத்தில் மூலக்காடு பக்கம் இருந்து கொளத்தூர் நோக்கி சென்று கொண்டிருந்தார். அவருக்கு எதிரே எதிர் திசையில் Dhost வாகனத்தை ஓட்டி வந்த நபர் இருசக்கர வாகனத்தில் வந்த கார்த்தியின் மீது தட்டிவிட்டு நிற்காமல் சென்றதை மூலக்காடு அருகே எதிரியின் வாகனத்தை பிடித்து கொண்டார்கள்.
3. காயம்பட்ட கார்த்திக்கு தலை மற்றும் காலில் அடிபட்டு இருந்தது. அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அதன் பிறகு கார்த்திக் உடலை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். விபத்து ஏற்படுத்திய எதிரியை நான் பார்க்கவில்லை. அவர் தட்டி விட்டு நிற்காமல் சென்றுவிட்டதால் நான் பார்க்கவில்லை. இந்த விபத்துக்கு இந்த வழக்கின் எதிரி தான் காரணம். அடுத்த நாள் போலீசார் என்னை விசாரித்தனர்.
4. எதிரி ஆஜரானால் அவரை என்னால் அடையாளம் காட்ட முடியும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எவ்வளவு நேரம் கழித்து சம்பவ நடந்த இடத்திற்கு சென்றேன் என்றால் ஒரு 20 செகண்ட் அல்லது ஒரு நிமிடம்தான் இருக்கும். போலீசார் சம்பவத்திற்கு அடுத்த நாள் காலையில் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் பதிவு எண், நான் ஓட்டி சென்ற வண்டியின் பதிவு எண், மற்றும் இறந்துபோன நபர் சென்ற வாகனத்தின் பதிவு எண் ஆகியவற்றை நான் காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை.
2. மேற்கண்ட மூன்று வாகனத்தின் பதிவு எண் தற்போது வரை தெரியாது. என்னுடைய வாகனத்தின் பதிவு எண்ணை எனது வீட்டிற்கு சென்று வண்டியை பார்த்தால்தான் தெரியும். Dhost வண்டியை ஓட்டி சென்ற நபரை பார்த்தேன். தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பாகவே சுமார் 20, 30 நபர்கள் அங்கு இருந்தார்கள்.
3. வண்டி மோதும்போது 50 அடி இடைவெளியில் இருந்தேன். மோதியதும் அங்கு வந்த வாகனங்களில் வந்த நபர்கள் வண்டிகளை நிறுத்தி இறங்கி கொண்டார்கள். அங்கு இருந்த 20,30 நபர்களை விலக்கி அருகில் சென்று

பார்க்கும்போதுதான் அடிபட்ட நபர் எனது நண்பர் கார்த்திக் என தெரிந்து கொண்டேன். அதற்கு முன்பாக கார்த்திக்தான் எனக்கு முன்னால் செல்கிறார் என்று எனக்கு தெரியாது.

4. எனது நண்பர் வரதராஜன் என்பவர்தான் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார். நான் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்யவில்லை. காவல் துறை விசாரணையில் கோபி என்பவர் தான் Dhost வண்டியை ஓட்டி சென்றதாக நான் சொல்லவில்லை. அப்போது அவருடைய பெயர் எனக்கு தெரியாது. கடந்த 10 நாளுக்கு முன்பாக இந்த நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையை பார்த்துதான் அவருடைய பெயர் கோபி என தெரிந்து கொண்டேன்.
5. இறந்துபோன கார்த்திக்கின் சித்தப்பா கோவிந்தராஜ் என்பவர்தான் புகார் கொடுத்தார். நானும் அவருடன் சென்றிருந்தேன்.காவல் நிலையத்தில்தான் புகார் கொடுத்தார். புகார் கொடுக்கும்போது நிலைய எழுத்தர் போன்ற ஒரு அதிகாரி அங்கு இருந்தார். இறந்து போன நபர் எனக்கு குடும்ப நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பார்க்காத ஒரு சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-03.52PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**